## பேரறிஞர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து விட்டு தேர்தல் பிரச்சாரம் தொடக்கம்!

# சட்டமன்றத் தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களியுங்கள்!

# உங்கள் வீட்டுப் பிள்ளையாக, உங்களில் ஒருவனாகக் கேட்கிறேன்!

## காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் — துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!






திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.3.2026) காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு இல்லத்தில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, 2026 சட்டமன்ற தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கினார்.





திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணிச் செயலாளரும் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.3.2026) காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு இல்லத்தில், அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் திருமதி நித்யா சுகுமார் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்கு கேட்டு காஞ்சிபுரத்தில் பிரச்சாரம் செய்தார்.

*காஞ்சிபுரம், மார்ச்.31–*

**வருகிற 23–ஆம் தேதி தமிழ்நாட்டில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலுக்கான சூறாவளி சுற்றுப்பயணத்தை, கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கினார். காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் வீட்டுக்குச் சென்று, அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திவிட்டு, பெரும் திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில் தேர்தல் பிரச்சாரம் செய்தார்.**

**அப்போது அவர், ``வருகின்ற 23–ஆம் தேதி நடைபெறும் தேர்தலில் கழக வேட்பாளர் நித்யா சுகுமார் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றிபெற வைக்கவேண்டும் என்று உங்கள் வீட்டுப் பிள்ளையாக கேட்கிறேன், உங்களில் ஒருவனாக கேட்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

*`எல்லோருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில், காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதிக்கு, நம் தலைவர் அவர்களால் உங்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டு இருக்கக்கூடிய நம் வெற்றி வேட்பாளர் சகோதரி நித்யா சுகுமார் அவர்களின் வெற்றியை, உறுதிசெய்கின்ற அளவிற்கு, நீங்களெல்லாம் வருகின்ற தேர்தலில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, மிகப்பெரிய வெற்றியைத் தேடிக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையில் உங்களையெல்லாம் தேடி வந்திருக்கிறேன்.*

### எழுச்சியும், மகிழ்ச்சியும்

*உங்களின் எழுச்சியையும், மகிழ்ச்சியான முகத்தையும் பார்க்கும்போது ஏற்கனவே சட்டமன்றத் தேர்தலில் வெற்றியை நீங்கள் உறுதி செய்துவிட்டீர்கள். வருகின்ற ஏப்ரல் 23–ஆம் தேதி வாக்குச்சாவடிக்குச் சென்று நம் சகோதரி நித்யா சுகுமார் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களிக்கப் போகிறீர்கள் என்பது உங்களைப் பார்க்கும்போதே தெரிகிறது.*

*கடந்த 2024–ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில், இதே காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் வீட்டிற்குச் சென்று, அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்துவிட்டு, அவரை வணங்கி என் தேர்தல் பிரச்சாரத்தை நான் தொடங்கினேன். அதே போல் இன்று சட்டமன்றத் தேர்தலுக்கும் நம் காஞ்சிபுரத்துக்கு வந்து, உங்களைச் சந்தித்து, உங்களைப் பார்த்துவிட்டு என் முதல் பிரச்சாரத்தைத் தொடங்கி காஞ்சிபுரம் தொகுதியின் வெற்றியை உறுதி செய்துவிட்டுப் செல்லப்போகிறேன். நாளை நம் தலைவர் அவர்கள், கலைஞர் அவர்கள் பிறந்த திருவாரூர் மாவட்டத்தில் பிரச்சாரத்தை ஆரம்பிக்கிறார்.*

*நான் அண்ணா பிறந்த காஞ்சிபுரம் மண்ணில் ஆரம்பிக்கிறேன். நம் தலைவர் கலைஞர் பிறந்த திருவாரூர் மண்ணில் ஆரம்பிக்கிறார். நீங்கள் பார்த்திருப்பீர்கள், இரண்டு நாட்களுக்கு முன்னால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தனது தேர்தல் பிரச்சாரத்தை சென்னையில் பா.ஜ.க. போட்டியிடுகின்ற மயிலாப்பூர் தொகுதியிலிருந்துதான் ஆரம்பித்தார். இதிலிருந்து என்ன தெரிகிறது? நம் கொள்கைத் தலைவர்கள் பேரறிஞர் அண்ணாவும், டாக்டர் கலைஞரும். எடப்பாடி பழனிசாமியின் கொள்கைத் தலைவர் யார்? அமித்ஷாவும், மோடி அவர்களும்தான்.*

### அனுமதிக்க மாட்டார்கள்

*மீண்டும் மோடியையும் அமித்ஷாவையும் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடலாமா? நிச்சயமாக தமிழ்நாட்டு மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். நம் தலைவர் அதைத்தான் தொடர்ந்து சொல்கிறார், வருகின்ற தேர்தல் டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் நடக்கக்கூடிய தேர்தல். மீண்டும் தமிழ்நாட்டுக்குள் பாசிச சக்தியை, பா.ஜ.க. சக்தியை நுழைய விடக்கூடாது. இன்று மக்களைச் சந்திக்க ஆரம்பித்திருக்கிறோம், மக்களிடம் சென்று வாக்குக் கேட்க ஆரம்பித்திருக்கிறோம். எந்த உரிமையில் கேட்கிறோம்? 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் என்னென்ன செய்து கொடுத்திருக்கிறோம்? தேர்தல் வாக்குறுதியாகச் சொன்ன அத்தனை திட்டங்களையும் செய்து கொடுத்திருக்கிறோம்.*

*ஆட்சிப் பொறுப்பேற்ற உடன் நம் தலைவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்று போட்ட முதல் கையெழுத்து மகளிராகிய உங்களுக்கான கையெழுத்து - விடியல் பயணத் திட்டம். இந்த விடியல் பயணத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மகளிரும் குறைந்தது மாதம் 900 ரூபாய் வரைக்கும் சேமித்திருக்கிறார்கள்.*

*குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு வர வேண்டும், படிக்கவேண்டும் என்று ஒன்றாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய அனைத்து குழந்தைகளுக்கும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்.*

### 10 லட்சம் இலவச மடிக்கணினிகள்

*இன்று 10 லட்சம் கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இலவச மடிக்கணினி திட்டத்தையும் அறிவித்து, ஒரே மாதத்தில் நம் தலைவர் கொடுத்திருக்கிறார். பள்ளிக்கூடம் படித்தால் போதாது, கல்லூரி சென்று படிக்கவேண்டும் என்று புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம். அரசுப் பள்ளியில் படித்து, எந்தக் கல்லூரியில் சென்று சேர்ந்தாலும், அவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் கல்வி ஊக்கத்தொகையும் நம் அரசு கொடுத்திருக்கிறது. 13 லட்சம் மாணவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள்.*

*இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். தேர்தல் அறிக்கையில் நாம் சொன்ன வாக்குறுதி. கடந்த மூன்று வருடமாக மாதம் 1,000 ரூபாய் ஒரு கோடியே 31 லட்சம் மகளிருக்கு நம் தலைவர் கொடுத்திருக்கிறார். இந்தத் திட்டத்தை இந்தத் தேர்தலை, காரணங்காட்டி மூன்று மாதம் நிறுத்த வேண்டும் என்று அ.தி.மு.க.–வும், பா.ஜ.க. கூட்டணியும் முயற்சி பண்ணினார்கள். ஆனால், நம் தலைவர் என்ன செய்தார்? 'நான் 1,000 ரூபாய் கொடுப்பதை நீங்கள் நிறுத்த முயற்சி செய்கிறீர்களா? இதோ கொடுக்கிறேன் 5,000 ரூபாய்' என்று 5,000 ரூபாய் ஒரு கோடியே 31 லட்சம் குடும்பங்களுக்கு நம் தலைவர் கொடுத்திருக்கிறார்.*

*2,000 ரூபாயாக உயர்வு*

*இன்னொரு வாக்குறுதியும் கொடுத்திருக்கிறார். மீண்டும் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்த உடனே மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பேன் என்று தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். நம் தலைவர் நிச்சயமாகச் சொன்னால் செய்துகாட்டுவார். இதையெல்லாம் மக்களிடம் கொண்டு சென்று நீங்கள் எடுத்து வைத்துப் பேசுங்கள்.*

### ஜாடிக்கேற்ற மூடி

*இப்படிப் பல திட்டங்களைச் செய்ததனால்தான் இன்று தமிழ்நாடு இந்தியாவிலேயே வளருகின்ற மாநிலங்களில் 11.19 சதவிகித வளர்ச்சியுடன் இன்று நம்பர் 1 மாநிலமாக நம் தமிழ்நாடு வந்திருக்கிறது. இதற்கெல்லாம் ஒன்றிய அரசு பா.ஜ.க. ஏதாவது நமக்குத் துணையாக இருந்தார்களா? நாம் கேட்கின்ற நிதியைக் கொடுக்கிறார்களா? தமிழ்நாட்டுக்கு என்று ஏதாவது திட்டத்தைக் கொண்டு வந்தார்களா? ஒன்றிய அரசு போடுகின்ற பட்ஜெட்டில் தமிழ்நாட்டுக்கு ஒரு திட்டம் கூட கிடையாது. தமிழ்நாடு என்கிற பெயர் கூட ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் கிடையாது. அப்படிப்பட்ட ஒன்றிய அரசை இன்று அ.தி.மு.க. என்கிற அடிமைக் கூட்டம் தமிழ்நாட்டிற்குள் கொண்டு வருகிறது. 'ஜாடிக்கேற்ற மூடி' என்று சொல்வார்கள், அது மாதிரி இன்று மோடிக்கேற்ற ஒரு அடிமையாக எடப்பாடி பழனிசாமி அவர்கள் இருக்கிறார்கள்.*

*நான் பலமுறை சொல்லியிருக்கிறேன், மீண்டும் சொல்கிறேன். நாம் முரட்டு பக்தர்களைப் பார்த்திருக்கிறோம், முரட்டுத் தொண்டர்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம். இன்று இந்தியாவே ஒரு முரட்டு அடிமையாக எடப்பாடி பழனிசாமி அவர்கள் ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட அந்த முரட்டு அடிமையை விரட்டியடிக்கவேண்டிய தேர்தல், வருகின்ற சட்டமன்றத் தேர்தல். இதை நீங்கள் நிச்சயமாகச் செய்வீர்கள் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. தமிழ்நாட்டைத் தொடர்ந்து ஒதுக்கி வருகின்ற பா.ஜ.க–வை நம் தமிழ்நாடு ஒதுக்கி வைக்க வேண்டும்.*

### பல்வேறு திட்டங்கள்

*தமிழ்நாடு என்றைக்கும் டெல்லிக்கு அவுட் ஆப் கண்ட்ரோல் என்பதை இந்தத் தேர்தலில் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும். இன்று பல்வேறு திட்டங்களை, வாக்குறுதிகளை நம் அரசு கொடுத்திருக்கிறது.*

*மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பேன் என்று நம் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். காலை உணவுத் திட்டம், இப்பொழுது ஐந்தாம் வகுப்பு வரைக்கும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் செய்துகொண்டிருக்கிறோம். மீண்டும் ஆட்சி அமைந்த உடனே ஐந்தாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரைக்கும் முதலமைச்சர் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்படும்.*

*புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம் வாயிலாக மாதம் 1,000 ரூபாய் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதை 1,500 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பேன் என்று நம் தலைவர் சொல்லியிருக்கிறார். அதே மாதிரி முதியோர் ஓய்வூதியத் திட்டம், 35 லட்சம் முதியோர்கள் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள், 1,200 ரூபாயை 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்பேன் என்று நம் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார். மாற்றுத்திறனாளிகளுக்கான ஓய்வூதியம் அதையும் 1,500லிருந்து 2,500 ரூபாயாக மாற்றிக் கொடுப்பேன் என்று நம் தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.*

### 35 லட்சம் மாணவ மாணவிகள்

*அடுத்த ஐந்து ஆண்டுகளில் 35 லட்சம் மாணவ மாணவிகளுக்கு மடிக்கணினி திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார் நம் தலைவர். மகளிர் குழுக்களுக்கு 5 லட்சம் வரைக்கும் பிணையில்லாத கடன்கள் வழங்கப்படும் என்ற வாக்குறுதியையும் நம் தலைவர் கொடுத்திருக்கிறார். இந்த வாக்குறுதியையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்றால், வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் நீங்கள் சகோதரி நித்யா சுகுமார் அவர்களை மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்துச் சட்டமன்றத்துக்கு நிச்சயம் அனுப்புவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.*

### காஞ்சிபுரம் திட்டங்கள்

***காஞ்சிபுரம் தொகுதியில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. சிலவற்றை மட்டும் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.***

***நகராட்சியாக இருந்த காஞ்சிபுரம், இருந்த காஞ்சிபுரத்தை இன்று மாநகராட்சியாக மாற்றிக் காட்டியது நம் தி.மு.க அரசு.***

***300 கோடி ரூபாய் மதிப்பில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் நடைபெற்றிருக்கின்றன.***

***300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டாம் கட்ட திருப்பாற்கடல் கூட்டுக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.***

***40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மஞ்சள் நீர் கால்வாய் மேம்பாட்டுப் பணிகள்.***

***பேரறிஞர் அண்ணா புற்றுநோய் மருத்துவமையத்தில் புதிதாக 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதிநவீன மருத்துவ உபகரணங்கள். 30 கோடி ரூபாயில் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் திருக்கோவில் குடமுழுக்கு நம் ஆட்சியில் நடத்தப்பட்டிருக்கிறது.***

***சுமார் 1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செங்கல்பட்டு - காஞ்சிபுரம் சாலையை நான்கு வழிச் சாலையாக மேம்படுத்தி இருக்கிறோம்.***

***70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாக்கடை சுத்திகரிப்பு நிலையங்கள் மேம்படுத்தப்பட்டிருக்கின்றன.***

***10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாநகராட்சிக்குப் புதிய கட்டடம்.***

### உங்கள் வீட்டுப் பிள்ளை

*இப்படிப் பல பணிகள் உங்கள் தொகுதிக்கு நடைபெற்றிருக்கின்றன. இன்னும் பல்வேறு பணிகள் நடைபெற வேண்டும் என்றால், வருகின்ற 23–ஆம் தேதி நடைபெறும் தேர்தலில் நீங்கள், சகோதரி நித்யா சுகுமார் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றிப்பெற வைக்கவேண்டும் என்று உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன், உங்களில் ஒருவனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன், முத்தமிழறிஞர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன். ஆதரிப்பீர் உதயசூரியன், உதயசூரியன், உதயசூரியன்!*

*இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.*

### பங்கேற்றவர்கள்

*மாவட்ட கழகச் செயலாளர் சுந்தர், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எழிலரசன், மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ், சி.கே.வி.தமிழ்ச்செல்வன், சன் பிராண்ட் ஆறுமுகம், இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர்கள் அப்துல் மாலிக், பிரபு கஜேந்திரன், அன்பழகன், ராமகிருஷ்ணன், சுந்தரவதனம், எம்.எஸ்.சுகுமார், சீனிவாசன், சிகாமணி, ஒன்றிய செயலாளர்கள் குமார், படுநெல்லி பாபு, பகுதி செயலாளர்கள் திலகர், சந்துரு, தசரதன், வெங்கடேசன், தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் யுவராஜ், மாநகர அமைப்பாளர் சுகுமார், துணை அமைப்பாளர்கள் மணி, பால்ராஜ், அருள் முருகன், சஞ்சய்காந்தி, ஆண்டோ, சிரில்ராஜ், இளம்பரிதி, யுவராஜ், மணிகண்டன், ராதாகிருஷ்ணன், சிலம்புச்செல்வன், குணசேகரன், விநாயகமூர்த்தி, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை, வார்டு, பாக அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், மற்றும் கூட்டணிக் கட்சி முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.*